தமிழ்நாடு அரசு

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை

**வட்டாட்சியர் அலுவலகம், கமுதி வட்டம்,**

**இராமநாதபுரம் மாவட்டம்.**

அறிவிக்கை எண்:அ7/5369/2025

நாள்: 02.10.2025

## அறிவிக்கை

இராமநாதபுரம் மாவட்ட வருவாய் அலகு, கமுதி வட்டத்தில் காலியாக உள்ள கிராம உதவியாளர் பணியிடங்களை நேரடி நியமனம் மூலம் நிரப்பிட கடந்த 08.08.2025 அன்று வழங்கப்பட்ட பத்திரிக்கை விளம்பரத்தின் பேரிலான திருத்தல் விளம்பரம் கீழ்க்கண்டவாறு வெளியிடப்படுகிறது. திருத்தல் விளம்பரத்தின் அடிப்படையில், மேற்படி பணிக்கு விண்ணப்பங்கள் தகுதி வாய்ந்த நபர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| விண்ணப்பங்கள் பெறப்படும் நாள் | - | 07.10.2025 |
| விண்ணப்பங்கள் சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள் | - | 21.10.2025 |

| | |
|---|---|
| பதவியின் பெயர் | கிராம உதவியாளர் |
| சம்பள விகிதம் | சிறப்பு காலமுறை ஊதியம் Level-06<br>(ரூ.11,100/- ரூ.35,100/-) |
| வட்டத்தின் பெயர் | கமுதி |
| விண்ணப்பிக்கும் வருவாய் கிராமம் | 1.மண்டலமாணிக்கம்(கூடுதல்)<br>2.இடிவிலகி<br>3.மரைக்குளம் |

**இனசுழற்சி விபரம்**

| வ. எண் | வருவாய் கிராமம் | இனச் சுழற்சி எண் | இனச்சுழற்சி | பொது/ ஆண்/ பெண் | முன்னுரிமை/ முன்னுரிமையற்றவர் | காலியிடம் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| 1. | மண்டலமாணிக்கம் (கூடுதல்) | 45 | பொதுப் பிரிவு (GT) | பொது | முன்னுரிமையற்றவர் | 1 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 2. | இடிவிலகி | 46 | மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பினர் (MBC/DNC) | முன்னாள் இராணுவத்தினர், PSTM | முன்னுரிமையற்றவர் | 1 |
| 3. | மரைக்குளம் | 47 | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (BC) (பிற்படுத்தப்பட்ட முஸ்லீம்கள் தவிர-BCM) | பெண் | முன்னுரிமையற்றவர் | 1 |

| | |
|---|---|
| கல்வித்தகுதி | தமிழ்நாடு அரசுத் தேர்வுகள் இடைநிலைப்பள்ளி இறுதி வகுப்பு சான்றிதழ் தேர்வில் (SSLC – Secondary School Leaving Certificate Examination) தமிழ் ஒரு பாடமாகக் கொண்டு தேர்வு எழுதப்பட்டிருக்க வேண்டும். (குறிப்பு: SSLC – Secondary School Leaving Certificate Examination) மதிப்பெண் பட்டியல் கட்டாயம் சமர்ப்பிக்க வேண்டும். (குறைந்தபட்ச கல்வித்தகுதி 10 -ஆம் வகுப்பு தோல்வி) |
| இதர தகுதிகள் | 1. விண்ணப்பதாரர்கள் கமுதி வட்டத்தைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும். கமுதி வட்டத்தில் நிரந்தரமாக வசித்து வருபவராகவும் இருத்தல் வேண்டும்.<br>2. தமிழில் பிழையின்றி எழுதப்படிக்கத் தெரிந்திருக்க வேண்டும்.<br>3. மிதிவண்டி, இருசக்கர வாகனம் ஓட்டும் திறன்<br>4. தெரிவு செய்யப்பட்டவரின் நடத்தை குறித்த முந்தைய குற்றப்பின்னணி குறித்தும் நியமன அலுவலர் அறிந்து திருப்தி அடைய வேண்டும்.<br>5. அடிப்படை விதி - 10 இன் படி உடல் தகுதிச் சான்று சமர்ப்பிக்க வேண்டும்.<br>6. தேர்ந்தெடுக்கப்படுபவரின் மனைவியோ/ கணவரோ உயிரோடு இருக்கும் போது வேறு திருமணம் செய்திருக்க கூடாது. |

| குறைந்தபட்ச வயது அனைத்து பிரிவினருக்கும் | இதர வகுப்பினர் | பிற்படுத்தப்பட்டோர் / மிகவும் பிற்படுத்தப்பட்டோர்/ சீர்மரபினர் | பட்டியலினத்தவர் / பழங்குடியினர் / ஆதரவற்ற விதவை | மாற்றுத்திறனாளிகள் | முன்னாள் இராணுவத்தினர் | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | இதர வகுப்பினர் | பிற்படுத்தப்பட்ட வகுப்பு / பிற்படுத்தப்பட்ட வகுப்பு (முஸ்லீம்)/ மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு/ சீர்மரபினர்/ பட்டியலினத்தவர் / பட்டியலினத்தவர் அல்லது பழங்குடியினர் |
| 21 | 32 | 39 | 42 | அதிகபட்ச வயது வரம்புடன் 10 ஆண்டுகள் சேர்த்து கொள்ளவும் | 50 | 55 |

குறிப்பு:-

- விண்ணப்பதாரர்கள் விண்ணப்பப் படிவங்களை https://ramanathapuram.nic.in/ என்ற இணையதள முகவரியில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
- மேற்குறிப்பிட்ட கிராம உதவியாளர் பணிக்காக ஏற்கனவே கடந்த <u>08.08.2025</u> நாளிட்ட விளம்பரத்தின் அடிப்படையில் விண்ணப்பம் செய்த நபர்கள் <u>மீண்டும் விண்ணப்பிக்க</u> **<u>தேவையில்லை.</u>** மேற்படி நபர்கள் ஏற்கனவே அளித்த விண்ணப்பங்கள் மீண்டும் பரிசீலனைக்காக எடுத்துக் கொள்ளப்படும்.

வருவாய் வட்டாட்சியர்,
கமுதிவட்டம்.
இராமநாதபுரம் மாவட்டம்.